IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:34/2013

**DEP OF WITNESS:DW3**

NAME:Pannerselvam RELIGION:Hindu

FATHER NAME:Subramani CASTE:Indhu kulalar

VILLAGE:Melpatti OCCUPATION:Social worker

TALUK:Pernambut Taluk AGE:61

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 11.10.2022

**முதல் விசாரணை**

1.நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றது அதன் அடிப்படையில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 25.06.2008 தேதியிட்ட கீதா என்பவர் தாராபாய் என்பவருக்கு விற்பனை செய்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்தும் ஆவணம் குறித்தும் சாட்சியம் அளிக்க சம்மன் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2.எனக்கு பெறப்பட்ட சம்மனில் 25.06.2008 என்று தேதி குறிப்பிட்டுள்ளது ஆனால் 26.05.2008 அன்று கீதா எனபவர் தாராபாய்க்கு எழுதிகொடுத்த விற்பனை பத்திரத்தில் பி.சா.ஆ.3 இன்னார் என்று ரூபித்தவர் என்ற இடத்தில் கையொப்பமிட்டுள்ளேன். கீதா என்பவர் ரூ.1,75,000 பணத்தை தாராபாய் என்பவரிடமிருந்து பெற்றுக்கொண்டு தாராபாய்க்கு தனது நிலத்தை விற்பனை செய்த பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பமிட்டேன்.

3.டி.டி.மோட்டூர் ஊராட்சியில் கமலாபுரம் கிராமத்தில் விவசாய நிலத்தை விற்பனை செய்தார். என்னுடன் சாட்சியாக சுப்பிரமணி மகன் ஜெயகுமார் என்பவர் கையொப்பம் செய்தார். பத்திரத்தில் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ள நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.4ல் 4வது பக்கத்தில் உள்ள முதலாவது புகைப்படம் என்னுடையது தான். பி.சா.ஆ.4 தாராபாய் ஜெயகுமார் என்பவருக்கு சொத்து விற்பதற்காக எழுதிகொடுத்த பொதுஅதிகார பத்திரத்தில் இன்னார் என்று ரூபித்தவர் என்ற இடத்திலும் சாட்சிகள் என்ற இடத்திலும் முதலாவது கையெழுத்து என்னுடையது தான்.

4.பி.சா.ஆ.3ல் உள்ள சொத்திற்கான பொதுஅதிகார பத்திரம் தான் பி.சா.ஆ.4.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1.எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரப்பெற்றது. 25.06.2008 தேதியிட்ட கீதா என்பவர் தாராபாய் என்பவருக்கு விற்பனை செய்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்தும் ஆவணம் குறித்தும் சாட்சியம் அளிக்க சம்மன் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்சொன்ன 25.06.2008 அன்று நான் எந்த பத்திரத்திலும் கையொப்பமிடவில்லை.

நான் சமூக சேவகர். நான் மேல்பட்டியில் வசித்து வருகிறேன். 2001 முதல் 2006 வரை மேல்பட்டி ஊராட்சி தலைவராக இருந்தேன். நான் நிலம் வாங்கி விற்பனை செய்வது சம்மந்தமாக தொழில் செய்து வருகிறேன்.

2.பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.4ல் கையொப்பமிட்டபோது அதில் உள்ள வில்லங்கள் அறிந்து கையொப்பமிட்டேனா என்றால் இல்லை. பதிவாளர் முன்னிலையில் கையொப்பமிடும்போது பதிவாளர் சொத்தில் வில்லங்கம் உள்ளதா என்று கேட்டபோது வில்லங்கம் எதுவும் இல்லை என்று கூறினார். தாவா சொத்தில் 24.04.1991 ரங்கநாதன் வாதி தரணியம்மாளுக்கு 25 செண்ட் கிரயம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் சமீபத்தில் தெரியவந்தது. அப்பொழுது வில்லங்கம் உள்ளது என்று தெரியவந்தது. தெரியவந்தபிறகு இது சம்மந்தமாக தாராபாயிடம் கேடடேனா என்றால் கேட்டேன். கேட்டபோது 25 செண்ட் நிலத்தை தரணியம்மாளுக்கு திருப்பிகொடுத்துவிடுவதாக கூறினார். இன்றுவரை தரணியம்மாளுக்கு 25 செண்ட் நிலத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3.பவர் கொடுக்கப்பட்ட ஜெயகுமார் இறந்துவிட்டார். வா.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழில் 24.04.1991 ஆண்டு ரங்கநாதன் தரணியம்மாளுக்கு 25 செண்ட் நிலம் எழுதிகொடுத்ததாக வில்லங்க சானறிதழில் உள்ளது என்றால் சரிதான். ஜெயகுமார் என்பவர எனது நண்பர் என்றால்சரிதான். நானும் ஜெயகுமார் நிலம் வாங்கி விற்பதில் ஒன்றாக தொழில் செய்து உள்ளோம் என்றால் சரிதான். 26.05.2008 அன்று தான் நான் இன்னார் எனறு ரூபித்தவர் என்ற இடத்தில் கையொப்பமிட்டேன். அதற்கு முன்பே சொத்தில் வில்லங்கம் உள்ளதை பார்க்காமல் பத்திரத்தில் கையொப்பமிட்டது தவறு தான் என்றால் சரிதான்.

4.பி.சா.ஆ.5ல் ரூ.2,50,000 விக்கிரய பத்திரம் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். விற்பனை பணம் கொடுக்கல் வாங்கல்களை நான் நேரடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.4ல் ஜெயகுமார் சொன்னதின் பேரில் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். தாராபாயும் ஜெயகுமாரும் உறவினர்கள் என்றால் சரிதான். தாராபாய் ஜெயகுமாரும் கூட்டுசதி செய்து வாதிக்கு வரவேண்டிய 25 செணட் நிலத்தை தராமல் இருக்க ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 ஆவணத்தை தயார் செய்தார்கள் என்றால் சரிதான். தாராபாய் ஜெயகுமார் என் நண்பர் என்பதால் அவருக்கு பவ்யப்பட்டு நான் பத்திரத்தில் கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. தரணியம்மாளுக்கு 25 செண்ட் நிலத்தை கிரயம் கொடுத்ததை தெரிந்துகொண்டு நான் பத்திரத்தில் கையொப்பமிட்டது தவறு என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF